සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 08 முதலாம் தவணைப் பரீட்சை - 2019 T

# செயன்முறைத் தொழிநுட்பத் திறன்கள்

**விவசாயம் - செயன்முறைச் சோதனை - இலக்கம் (01)**

சாடிப் பயிர்ச்செய்கைக்கான தற்காலிகச் சாடியான்றில் நாற்றொன்றை நடுதல்.

01. தேவையான உபகரணங்கள் :-
   - ❖ கை அள்ளு - 01
   - ❖ தாச்சிகள் - 02

02. தேவையான பொருட்கள் :-
   - ❖ பொலிசக் உறை (5$kg$ அல்லது 10$kg$ அரிசி உறை)
   - ❖ வடித்தெடுக்கப்பட்ட தரைமண், கொம்போஸ்ட் உரம் அல்லது காய்ந்த சாணி
   - ❖ நாற்றுக்கள் (மிளகாய் கன்று, கத்தரிக்காய் கன்று, தக்காளிக் கன்று போன்றவை)
   - ❖ நீர்

03. ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள் :-
   - ❖ மேலே தரப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களை வெவ்வேறான இடங்களில் வைத்து வேலைச்சூழலை தயார்படுத்தவும். செயற்பாட்டின் முடிவில் கன்றுகளுடனான சாடிகளை வைப்பதற்கு வேறு தனியாக இடமொன்றைப் பயன்படுத்தவும்.

04. மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் :-
   - ❖ வேலைத்தளத்திலுள்ள பொருட்களைப் பயன்படுத்தியும் உபகரணங்களையும் சரியாகப் பாவித்தும், குறித்த நேரத்தினுள் சாடிப் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான தற்காலிகச் சாடியொன்றில் தேவையான ஊடகங்களையிட்டு நிரப்பி உரியவாறு கன்றொன்றை நாற்றவும்.

**புள்ளி வழங்குவதற்கான நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | தேவையான பொருட்கள் உபகரணங்களைத் தெரிவு செய்தல். | (05 புள்ளிகள்) |
| 2. | உபகரணங்கள், பொருட்களைச் சரியாகப் பயன்படுத்துதல். | (05 புள்ளிகள்) |
| 3. | உரிய படிமுறைகளுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடல். | (05 புள்ளிகள்) |
| 4. | முடிவு | (05 புள்ளிகள்) |
| 5. | வேலைச்சூழல் சுத்தமாக இருத்தல். | (05 புள்ளிகள்) |
| | | (25 புள்ளிகள்) |

**உணவு - செயன்முறைச் சோதனை - இலக்கம் (02)**

உணவின் தரத்தைப் பேணுதல்.

01. தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் :-
   - ❖ சிதைவடைந்து நொருங்கிய காய்கறிகள் அல்லது பழவகைகள்
   - ❖ பூஜனத்துடனான உணவு
   - ❖ கிருமிகளால் பாதிக்கப்பட்ட உணவு
   - ❖ பழுதடைந்த பால்
   - ❖ பழுத்த பழமொன்று

02. ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள் :-
   1. குறித்த சூழலிற்குப் பொருத்தமானவாறு தலா இரு வினாக்கள் வீதம் ஒழுங்குபடுத்தி இடத்தினை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும்.
   2. உதாரணம் : பூஜனத்துடனான பாண்துண்டொன்று,



kalvi.lk

உதாரணம் : i. பழுதடைந்த முறை எது?

ii. அதிலுள்ள பண்பொன்றைக் குறிப்பிடுக.

இம்முறையில் தலா இரு வினாக்கள் வீதம் 10 வினாக்களைத் தயார்படுத்திக் கொள்ளவும்.

3. ஒரு தடவையில் காணப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குறித்த வினாக்களை தயாரிக்குக. அதிகரிக்க அல்லது குறைக்க முடியும்.
4. வினாவிற்கு 21/2 புள்ளிகள் வீதம் புள்ளி வழங்கவும்.
5. பொருத்தமானவாறு நேரத்தை வழங்கவும்.

03. மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் :-

❖ குறித்த இடத்திலுள்ள உணவுகளை மேற்பார்வை செய்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

**புள்ளி வழங்குவதற்கான நியதிகள்**

ஒரு இடத்தினைப் பரிசோதனை செய்வதற்கு 05 புள்ளிகள் வீதம் 25 புள்ளிகள்.

**<u>ஆரம்ப தொழில் நுட்பம் - செயன்முறைச் சோதனை - இலக்கம் (03)</u>**

சுவர் அலங்காரமொன்றை உருவாக்குதல்.

01. தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் :-

❖ பலகைத்துண்டொன்று

❖ சிப்பிகள்/ வட்டக்காய் விதை/ புளியம்பழ விதை/ வெள்ளரிக்காய் விதை/ கிபிள் விதை என்பவற்றில் சில வகைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

❖ பைண்டர் பசை

❖ மணல் கடதாசித்துண்டு

❖ வார்னிஸ் நிறப்பூச்சு (பெற்றுக் கொள்ள முடியுமாயின்)

❖ பொருத்தமான பென்சிலொன்று

02. ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள் :-

1. மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களைச் சேகரித்து பொருத்தமானவாறு வேலைச்சூழலைத் தயார் படுத்திக் கொள்ளவும்.
2. மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கவும்.

03. மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் :-

1. விருப்பமான வடிவத்தையுடைய பலகைத்துண்டொன்றை தெரிவு செய்து கொள்ளவும்.
2. மணல் கடதாசியினைப் பயன்படுத்தி பலகைத்துண்டின் மேற்பகுதியினை மெதுமைப்படுத்தவும்.
3. விருப்பமான விதை வகைகள் சிலவற்றையும் பசையினையும் பயன்படுத்தி சுவரினை அலங்கரிப்பதற்குப் பொருத்தமான ஆக்கமொன்றைத் தயார் செய்யவும்.

**புள்ளி வழங்குவதற்கான நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | தேவையான பொருட்கள் உபகரணங்களைத் தெரிவு செய்தல். | (20 புள்ளிகள்) |
| 2. | பலகையினை பொருத்தமானவாறு மெதுமையாக்கல். | (20 புள்ளிகள்) |
| 3. | ஆக்கத்தினை தயார் செய்தல். | (20 புள்ளிகள்) |
| 4. | முடிவு | (20 புள்ளிகள்) |
| 5. | வேலைச்சூழல் சுத்தமாக இருத்தல். | (20 புள்ளிகள்) |
| | | (100 புள்ளிகள்) |

**<u>வணிக நடவடிக்கைகள் - செயன்முறைச் சோதனை - இலக்கம் (04)</u>**

மனிதர்களின் தேவையொன்றை (உணவு, உடை, உறையுள், வசிப்பிடம், கல்வி, சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து, பாதுகாப்பு, பொழுதுபோக்கு) நிறைவு செய்வதற்கான பொருளொன்றைத் தயாரித்தல்.

01. தேவையான பொருட்கள் (மாணவர்கள் கொண்டு வர வேண்டும்.)

❖ பாவனைக்கெடுக்கப்படாமல் பிரதேசத்தில் ஒதுக்கப்படுகின்ற வளங்கள் (பழவகைகள், பலா, ஈரப்பலா, வைக்கோல், மரங்களிலிருந்து காய்ந்து விழும் இலைகள், மலர்கள், காய்கள், மரத்தூள், உமித்தூள் போன்றவைகள்)



kalvi.lk

- ❖ ஆக்கத்தினை/ பொருளினை தயாரிப்பதற்குத் தேவையான பசை, கத்தரிக்கோல் போன்றவைகள்.
- ❖ கழிவுகள் (உதாரணம்) - பொருட்களை பொதி செய்துள்ள காட்போட் பெட்டி, பிளாஸ்டிக் போத்தல், குளிர்பான உறிஞ்சு குழாய்கள், ஆப்பிள், தோடம்பழத்தை சுற்றி வரும் பாதுகாப்பு உறைகள், கடதாசிகள், காட்போட், நிறப்பூச்சு, மை தீர்ந்த காபன் பேனைகள்.
- ❖ ஆக்கத்தினை/ பொருளினை தயாரிப்பதற்குத் தேவையான பசை, கத்தரிக்கோல் போன்றவைகள்.

02. ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள் :-

1. பாவனைக்கெடுக்காது பிரதேசத்தில் ஒதுக்கப்படுகின்ற பொருட்கள் தொடர்பில் மாணவர்களுடன் முன்னரே கலந்துரையாடி மாணவர்களுக்கு இது தொடர்பில் விளக்கமளிக்கவும்.
2. பொருட்களை பயன்படுத்திய பின்னர் எங்களால் சுற்றாடலில் வீசப்படுகின்ற பொருட்கள் தொடர்பிலும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
3. ஒரு நியதிக்கு 05 புள்ளிகள் வீதம் வழங்கவும்.
4. செயற்பாட்டினை முடிக்க 50 நிமிடங்கள் வழங்கவும்.

03. மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் :-

1. நீங்கள் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கின்ற பொருளினை தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களை முன்னரே சேகரித்து உரிய நாளில் பாடசாலைக்கு கொண்டு வரவும்.
2. நீங்கள் தயாரிக்க எதிர்பார்க்கின்ற பொருளினை உருவாக்குவதற்கான முன்பயிற்சியினை முன்னரே பெற்றுக் கொள்ளவும்.
(உதாரணம் - கால்துடைப்பம், சுவர் அலங்காரம், வாழ்த்து அட்டை போன்ற ஆக்கங்கள்)

**புள்ளி வழங்குவதற்கான நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | முன் ஆயத்தம் | (05 புள்ளிகள்) |
| 2. | கழிவாக ஒதுக்கப்படுகின்ற வளங்களைப் பயன்படுத்தல். | (05 புள்ளிகள்) |
| 3. | ஆக்கமானது மனிதர்களின் தேவைகளுக்கான தீர்வொன்றாக காணப்படல். | (05 புள்ளிகள்) |
| 4. | தரம் 8 மாணவர்களின் மட்டத்திற்கேற்றதாக ஆக்கம் காணப்படல். | (05 புள்ளிகள்) |
| 5. | வேலைத்தளத்தினை சுத்தம் செய்தல். | (05 புள்ளிகள்) |
| | | (25 புள்ளிகள்) |

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**